முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

# மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்

## பாகம்: 714

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

12.09.2021, ஞாயிற்றுக்கிழமை

1. ஓங்கார ஞானியே ஆறுமுக அரங்கா
   ஓங்கார குடில் படைத்த ஞான தேசிகா
   ஓங்காரன் என் தத்துவமாக விளங்கும்
   உயர் ஞானியே கலியுகத்தின் மாதவசியே
2. தவசியே ஞான தேசிகனே
   தாமுரைப்பேன் ஞான அறிவுரை ஆசி தன்னை
   அவனியில் சுப்ரமணியப்பெருமான் யானும்
   அரங்கனுக்கு பிலவ வேங்கை திங்களில் உரைப்பேன்
3. உரைக்கவே அரங்கனின் தர்மமும் தவபலமும்
   உலகத்தை கடைத்தேற்றி நல்வழி நடத்தும்
   வகையான அரங்கன் தொண்டர்படைகளே
   வையகத்தை பெருமாற்றம் செய்து காத்தருளும்
4. அருளாக அறமாக அனைத்து சூட்சுமமாக
   அரங்கனுள் ஆறுமுகன் யானிருக்க
   அருள்வேண்டி உலகமாற்றம் வேண்டி
   அகிலத்தார் அரங்கன் ஓங்காரக்குடில் நோக்கி வரவர
5. வருகவே உலகத்தின் இடர்கள் விலகும்
   வல்லமையான அரங்கன் சக்தி எங்கும் பரவி
   தர்மபலமாக மாறி இந்த கலியுகமே
   தவசி அரங்கன் தலைமையில் ஞானயுகமாற்றம் பெறும்
6. மாற்றம் தந்து மக்களை மீட்டு
   மண்ணுலகில் தர்மத்தை எங்கும் நிரப்பி
   ஆற்றல்பட தர்மலோகம் படைத்து
   படைத்துமே உலகத்தை ஞானயுகமாற்றம் செய்ய
7. பரோபகாரம் விதைத்து வரும் அரங்கனே
   சோடை வென்று உலகத்தின் பேரிடர்களையும் நீக்கி
   உயர்வான பாதுகாப்பு மிக்க ஞானயுகம்
   படைக்கும் சர்வ வல்லமைகொண்ட ஞானியாகும்
8. ஞானியரின் திருபதம் பற்றி
   ஞானதீட்சை ஏற்று வருவோரெல்லாம்
   ஞானிகளாகி இந்த கலியுகத்தில்
   நற்பேறு கண்டு திளைக்க நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–